முருகப்பெருமான் துணை

**மகான் வாயிலார் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.03.2023,** வியாழக்கிழமை

1. தவமிக்க ஞானியே அரங்கா
   தன்னலம் கருதா மக்களிடை
   அவனிமேல் பொதுநலப் பற்று
   அனைத்தும் சமம் எனக்கருதும்
2. கருதும் ஞானம் அருளவந்த
   கலியுக அவதார தவசியே
   உறுதிபட உன் பெருமை கூறி
   உயர்வுதரும் அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது சேல்திங்கள்
   அறிவிப்பேன் மூவையோர்திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் **16** ம் நாள், **30.03.2023,** வியாழக்கிழமை)
   ஆசிதனை வாயிலார் நாயனாரும்
   அருளுவேன் உலகநலம் காண
4. காணவே உலகமக்களிடை
   கண்ணியம் கட்டுப்பாடுடனான
   ஞானவழி முறைகளை விதைக்கும்
   ஞானியாக வந்த அரங்கன்
5. அரங்கன் திருவடி பற்றியே
   அகிலத்தார் தொடர்ந்து வர
   வரங்களாக சக்திகள் பெருகி
   வளர்ச்சி நிலை செயல்களில் கூடி
6. கூடியே தரும ஞானமெல்லாம்
   குருவரங்கனால் சித்தியாகி
   தேடிவரும் பொருள் பதவி
   தெய்வநிலையாக சர்வ பாதுகாப்பும்
7. காப்பும் பெருகி உலகினில்
   கடைநிலை உள்ளவர்க்கும்
   ஒப்புக் கொண்டு பசிபிணி விரட்டும்
   உயர்நிலை பெருகி இனிதே

8. இனிதே தேற்றமும் மாற்றமும்
எல்லாஉயிரும் சமம் எனும்
கனிவேலவன் ஆசிபட ஞானம்
கட்டாயம் புலப்பட நேரும்
9. நேருமை கொண்டு வாழ்ந்திட
நீதி குன்றா ஆட்சி முறை
வருமுலகில் உலகம் கண்டிட
வழிகாட்டலாக மக்களிடை ஞானம்
10.ஞானம் பரவி நல்லவர்கள்தான்
ஞான சபை போலத் தேர்வு
தானாக ஆளுமைக்கு வந்து
தரணியே பாதுகாப்பு நிறைந்த
11. நிறைந்த ஞான ஆட்சி காணும்
நிலவுலகம் பெருமாற்றம் கண்டு
குறைவிலா ஞானவான்கள் பலர்
குவலயம் கொண்ட வண்ணம் தேறும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—